# திருநெல்வேலி மாநகராட்சி

## 31.03.2023 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

## *பொருட்கள்*

1. திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மனக்காவலம்பிள்ளை சாலையில் அமையப் பெற்றுள்ள மாநகராட்சி பல்நோக்கு கூட்ட அரங்க கட்டிடத்திற்கு ”டாக்டர் கலைஞர் அரங்கம்” என பெயர் சூட்டுவதற்கு மாநகராட்சி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண் 39252/2022/டிபி1/ நாள் 15.03.2023ம் கடிதத்தில் மாமன்றத்திற்கு பொருள் வைக்க அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மனக்காவலம்பிள்ளை சாலையில் அமையப் பெற்றுள்ள மாநகராட்சி பல்நோக்கு கூட்ட அரங்க கட்டிடத்திற்கு ”டாக்டர் கலைஞர் அரங்கம்” என பெயர் சூட்டுவதற்கு மாநகராட்சி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :**

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்

ந.க.எண் இ1 / 7760/ 2022

**தீர்மானம் எண்: 250 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

2. திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்கான ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டம் தயாரித்தல் (Comprehensive Mobility Plan)என்பது மாநகர பகுதியில் மக்கள் மற்றும் பொருட்களைநிலையான (Sustainable) வழியில் நகர்த்துவதற்கான ( Mobility ) நீண்ட கால மற்றும் தொலைநோக்கு பார்வையுடன் கொண்ட ஆய்வறிக்கையாகும். இவ்வாய்வறிக்கை திட்டங்கள் மற்றும் முதலீட்டு திட்டங்களின் பட்டியலை கொண்ட ஆவணமாகும். Comprehensive Mobility Plan என்பது ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் போக்குவரத்துத் திட்டங்களுக்கு ஒரு முன் நிபந்தனையான ஆவணம் ஆகும். இந்த ஆவணம் ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையால், செப்டம்பர் 2014இல் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு சேவை நிதி நிறுவனத்தால் (TNUIFSL) நிர்வகிக்கப்படும் திட்ட மேம்பாட்டு மானிய நிதி (PGDF)ன் கீழ் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்கான சி.எம்.பி. (Comprehensive Mobility Plan) தயாரிக்க M/s.Urban Mass Transit Company Limited நிறுவனத்தை நியமித்துள்ளது. மேற்படி நிறுவனத்தரால் 2021 ம் ஆண்டு

அக்டோபர் 28ஆம் தேதிய ஆய்வு தொடங்கப்பட்டது . இறுதி சி.எம்.பி. ஆய்வறிக்கையானது மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் முன்னிலையில் 25 மார்ச் 2023 ஆம் தேதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.

திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழும பகுதிக்கான அடுத்த 20 ஆண்டுக்களுக்கான சாலை மேம்பாடுகள், பொது போக்குவரத்து மேம்பாடுகள், மோட்டார் அல்லாத போக்குவரத்து மேம்பாடுகள், இயக்கம் மேலாண்மைத் திட்டங்கள் மற்றும் சரக்கு போக்குவரத்து மேலாண்மைத் திட்டங்கள் போன்ற பல்வேறு போக்குவரத்து திட்டங்கள் இந்த ஆய்வில் பட்டியலிடப்பட்டுள்ளன.

இந்த ஆய்வு திட்ட ஆவணம் விரிவான ஆய்வுகள், பகுப்பாய்வு பயன தேவை முன்னறிவிப்பு மற்றும் பல்வேறு பங்குதாரர்கள், அரசு சாரா தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் தொழிற்சார்ந்த அமைப்புகள் மூலம் ஆலோசனைகள் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆய்வின் வெளியீடு அடுத்த 20 ஆண்டுகளுக்கு தேவைப்படும் போக்குவரத்து உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான மாஸ்டர் பிளான் ஆகும்.

மேற்கண்ட நிறுவனம் தயாரித்த ஆய்வறிக்கையை ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிடமும் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க வேண்டும். அதன் அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் நிதியுதவி பெறவும் இந்த ஆவணம் முக்கியமானதாகும். மேலும் இந்த ஆய்வு அறிக்கையினை ஒன்றிய மற்றும் மாநில அரசிடம் சமர்ப்பிப்பதற்கு மாநகராட்சியின் ஒப்புதலை பெற வேண்டும். எனவே இந்த ஆய்வறிக்கை மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண். இ3/3348/2021**

## தீர்மானம் எண்: 251 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

3. திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் முன்னாள் இராணுவத்தினர் கழகம் மூலம் நியமிக்கப்பட்டு ஒப்பந்த பணியாளர்கள் பேருந்து நிலைய பாதுகாப்புபணி, பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணி, பேருந்து நிலையத்தில் வாகன காப்பகத்தில் வசூல் செய்யும் பணி, ஆம்னி பேருந்து நிலையத்தில் வசூல் செய்யும்பணி, மற்றும் சிறுநீர் கழித்தல் புகை பிடித்தல் அபராதம் வசூல் செய்யும் பணி ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி ஒப்பந்த பணியாளர்களில் மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் பணிபுரிந்து வரும் முன்னாள் இராணுவத்தினர் 25 பணியாளர்கள் மற்றும் ஆம்னி பேருந்து நிலையத்தில் 3 பணியாளர்கள் ஆக மொத்தம் 28 பணியாளர்களுக்கு மாமன்ற தீர்மானம் எண் 07, நாள்: 11.04.2022 -இன் படி 01-04-2022 முதல் 31-03-2023 வரை பணியில் அமர்த்திக்கொள்ள மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி முன்னாள் இராணுவத்தினா் கழக பணியாளா்களுக்கு 01-04-2020 முதல் அகவிலைப்படியுடன் கூடிய ஊதியம் தலைமை காவலா் மற்றும் இளநிலை உதவியாளா் நிலையில் ரூ.22003/-, பாதுகாவலா் நிலையில் ரூ.19239/- வழங்க மாமன்ற தீா்மானம் எண் 204, நாள்: 30-12--2020 -இன் படி மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட புதிய பேரூந்து நிலையம் நகர சீா்மிகு திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வந்ததால் சிறைத்துறைக்கு சொந்தமான காலி இடத்தில் தற்காலிகமாக திருநெல்வேலி மாநகராட்சி பேரூந்து நிலையம் இயங்கி வந்தது. அத்துடன் ஆம்னி பேரூந்து நிலையமும் செயல்பட்டு வந்தது.

தற்போது நகர சீா்மிகு திட்டப்பணிகள் முடிவு பெற்று புதிய பேரூந்து நிலையம் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. அத்தகைய காரணத்தினால் ஆம்னி பேரூந்து நிலையம் சிறைத்துறைக்கு சொந்தமான இடத்திலிருந்து காலி செய்யப்பட்டது. மேலும் அங்கு பணியாற்றி வந்த TEXCO பாதுகாவலா்கள் 3 நபா்கள் திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பாளையங்கோட்டையில் நகர சீா்மிகு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வ.உ.சி மைதானத்தில் பாதுகாப்பு பணி செய்ய, காவலா்கள் தேவைப்பட்டதால் புதிய பாதுகாவலா்களை நியமிக்காமல் ஆம்னி பேரூந்து நிலையத்தில் பணிபுரிந்து வந்த 3 பாதுகாவலா்களை வ.உ.சி மைதானத்திற்கு பாதுகாப்பு பணிக்கு அனுப்பப்பட்டு தற்போது அவா்கள் பணிபுரிந்து வருகின்றாா்கள்.

தற்போது G.O.(Ms) No: 61 PUBLIC (EX-SERVICEMEN) DEPARTMENT dated 09.01.2023 ன்படி ஊதியம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மேலும் பணப்பயன்கள் மேற்காணும் அரசாணை வெளியிட்ட நாள் முதல் அமுல் படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவியின் பெயா் | பணியாளா்களின் எண்ணிக்கை | மாத ஊதியம் |
|---|---|---|---|
| 1 | தலைமை காவலா் | 1 | 24196/- |
| 2 | பாதுகாவலா் | 18 | 21082/- |
| 3 | பாதுகாவலா் வாகன காப்பகம் | 3 | 21082/- |
| 4 | இளநிலை உதவியாளா் நிலையில் முன்னாள் இராணுவத்தினா் | 3 | 24196/- |
| 5 | பாதுகாவலா் - ஆம்னி பேருந்து நிலையம் (தற்போது நகர சீா்மிகு திட்டத்தின் கீழ் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் மாற்று பணியாக பணி ஏற்பாட்டின் கீழ் முன்னாள் இரானுவத்தினா் பாதுகாப்பு கழக பணியாளா்கள் பணிபுரிந்து வருகின்றாா்கள்) | 3 | 21082/- |

மேற்படி பேருந்து நிலைய பாதுகாப்பு பணி நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணி ஆகியவற்றின் அவசியம் கருதி 01-04-2023 முதல் 31-03-2024 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு முன்னாள் இராணுவத்தினா் மூலம் தோ்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு

பணியாளர்கள் (Security Guard) 24 நபர்களை பணியாற்ற அனுமதித்தும் மாத ஊதியம் ரூ.21082/-, தலைமை காவலர் 1, மற்றும் இளநிலை உதவியாளர் நிலையில் முன்னாள் இராணுவத்தினர் 3 நபர்களை பணியாற்ற அனுமதித்தும். மாத ஊதியம் ரூ.24196/- மற்றும் 8% சேவை கட்டணமும் 18% சேவை வரி (CGST 9% + SGST 9%) எனும் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட 28 பணியாளர்களுக்கான ஊதிய செலவுகளுக்கும் மாமன்ற அனுமதிக்கும் முடிவிற்கும்.

## அலுவலக குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் மூலம் பணிபுரிந்து வரும் 28 டெக்ஸ்கோ பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 01-04-2023 முதல் 31-03-2024 முடிய உள்ள காலத்திற்கு தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற அனுமதிக்கவும், அதற்கான செலவுகளுக்கும், அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: சி1/1903/2003**

**தீர்மானம் எண்: 252 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

4. திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் சீர்மிகு நகரத் திட்டம் (Smart City Scheme) ன் கீழ் புதிதாக பல் அடுக்கு வாகன காப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்யும் பணிக்கு கூடுதலாக முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக் கழகம் (TEXCO) மூலம் 3 பாதுகாவலர்களை பணியமர்த்தி கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாகன காப்பகத்தின் கட்டணம் வசூல் செய்யும் பணியின் முக்கியத்துவம் கருதி முன்னாாள் இராணுவத்தினர் பாதுகாப்புக் கழகம் (TEXCO) மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு பணியாளர் 3 நபர்களை 09.02.2023 முடிய பணியாற்ற அனுமதித்தும் மாத ஊதியமாக ரூ.19239/- மற்றும் சேவைக் கட்டணம் ரூ.12% மற்றும் சேவை வரி ரூ.18% எனும் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்: 10 நாள்: 11.04.2022ல் அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது மேற்படி காலம் முடிவடைந்துள்ளதால் மேலும் ஓராண்டு காலத்திற்குபணியமர்த்தவும் (10.02.23 முதல் 09.02.2024 முடிய) ஊதிய செலவுகள் அரசாணையின்படி (G.O.(Ms) No: 61 PUBLIC (EX-SERVICEMEN) DEPARTMENT dated 09.01.2023) அதற்கான மாத ஊதியமாக ரூ.21082/- மற்றும் சேவைக் கட்டணம் ரூ.8% மற்றும் சேவை வரி ரூ.18% எனும் அடிப்படையில் 3 பாதுகாவலர்களுக்கான ஊதிய செலவினங்கள் மேற்கொள்ள மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

பொருளில் காணும் விபரப்படி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் சீர்மிகு நகரத் திட்டம் (Smart City Scheme) ன் கீழ் புதிதாக பல் அடுக்கு வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்யும் பணிக்கு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக் கழகம் (TEXCO) மூலம் 3 பாதுகாவலர்களை 10.02.2023 முதல் 09.02.2024 முடிய உள்ள காலத்திற்கு தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற அனுமதிக்கவும், அதற்கான செலவுகளுக்கும், அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: சி1/1903/2003**

## தீர்மானம் எண்: 253 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

5. திருநெல்வேலி வட்டம் தென்னக ரயில்வே வாஞ்சி மணியாச்சி சந்திப்பு முதல் நாகர்கோவில் சந்திப்பு வரையிலான ஒரு வழி இருப்புப் பாதையினை இரு வழித்தடமாக மாற்றியமைக்கும் வகைக்கு தேர்வு செய்யப்பட்ட மேலவீரராகவபுரம் கிராமம், கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்ட நிலங்களை நில மாற்றம் செய்ய ரயில்வே துறைக்கு ஒதுக்கீடு செய்ய தடையின்மை சான்று வழங்க தீர்மானம் நிறைவேற்றி அதன் நகல் அனுப்பிவைக்க கோரப்பட்டுள்ள மாவட்ட வருவாய் அலுவலர், திருநெல்வேலி மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்: எ4/53210/2022 நாள்: 23.2.2023 மற்றும் வட்டாட்சியர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்: அ2/6/2023 நாள்: 3.2.2023ம் தேதிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் . மேற்படி கடிதத்தில்,

தடையில்லாச் சான்று கோரும் புலஎண்கள் நகரளவை பதிவேட்டில் பின்வருமாறு தாக்கலாகியுள்ளது.

| வட்டம் | கிராமம் | நகர அளவை வார்டு பிளாக் TS எண் | வகைப்பாடு | குறிப்பு கலம் | மொத்த பரப்பு ச.மீ | பயன்பாட்டு அனுமதி கோரும் பரப்பு ச.மீ. |
|---|---|---|---|---|---|---|
| திருநெல்வேலி | மேல வீரராகவபுரம் | J11/ TS 982 | சர்க்கார் புறம்போக்கு | தெரு | 00608 | 00251 |
| திருநெல்வேலி | மேல வீரராகவபுரம் | AJ16/ TS 1262 | சர்க்கார் புறம்போக்கு | ஓடை | 00044 | 00044 |
| திருநெல்வேலி | மேல வீரராகவபுரம் | AJ 16 /TS 1269 | சர்க்கார் புறம்போக்கு | பூஸ்துதி பாதை | 00090 | 00090 |
| திருநெல்வேலி | மேல வீரராகவபுரம் | AJ 16 /TS 1271 | சர்க்கார் புறம்போக்கு | தெரு | 00203 | 00203 |
| திருநெல்வேலி | மேல வீரராகவபுரம் | AJ 15 /TS 1222 /2A | சர்க்கார் புறம்போக்கு | ரோடு | 00060 | 00021 |

**அலுவலக குறிப்பு:-**

மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் வட்டாட்சியர் ஆகிய அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்ட நிலங்களை நில மாற்றம் செய்ய ரயில்வே துறைக்கு பயன்பாட்டு அனுமதிக்கு தடையின்மை சான்று வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: TP1/835/2023)**

## தீர்மானம் எண்: 254 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

6. திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்திற்குட்ட வார்டு எண்: 15 பார்ச்சுலா தைக்கா தெரு கதவு எண்: 52 இல் அமைந்துள்ள கட்டிடமானது யூசுப்பியா எத்திம் கானா அல் மதரஸத்துல் யூசுப்பியா ஸ்தாபனம் அனாதை இல்லமாக செயல்பட்டு வருவதாகவும், அதற்கு சொத்து வரி விதிப்பிலிருந்து வரிவிலக்கு வழங்கும்படி அதனுடைய மேனேஜிங் டிரஸ்டி மனு சமர்பித்துள்ளார். மேற்படி மனு தொடர்பாக மேற்படி கட்டிடத்தினை உதவி வருவாய் அலுவலர் நேர் ஆய்வு செய்து மேற்படி கட்டிடதில் யூசுப்பியா எத்திம் கானா அல் மதரஸத்துல் யூசுப்பியா ஸ்தாபனம் அனாதை இல்லமாக செயல்பட்டு வருவதாகவும், அதற்கு திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் பிரிவு 123 (C) இன் படி சொத்து வரி விதிப்பிலிருந்து வரிவிலக்கு அளிக்கலாம் என பரிந்துரைசெய்துள்ளார். அதனடிப்படையில் மேற்படி கட்டிடத்திற்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் .

**அலுவலக குறிப்பு:**

மேலே பொருளின் காணும் விவரப்படி திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 15 பார்ச்சுலா தைக்கா தெரு, கதவு எண் 52 கட்டிடமானது 25 ஆண்டுகளாக அனாதை இல்லமாக செயல்பட்டு வருகின்றது. திருநெல்வேலி மண்டலம் உதவி வருவாய் அலுவலர் அறிக்கையில் மேற்படி கட்டிடத்தை நேரடியாக சென்று ஆய்வு செய்ததில் மேற்படி அனாதை இல்லமாக செயல்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாதுஷா யூசுப்பியா அனாதை இல்லம் மாநகராட்சி அலுவலர்களால் நேராய்வு செய்யப்பட்டது. தற்போது கொரோனா காலத்திற்கு பிறகு செயல்படாமல் உள்ளது. விரைவில் மீண்டும் செயல்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே பல ஆண்டுகளாக வரி விலக்கக்களிக்கப்பட்டுள்ளதாகவும் , தற்போது மேற்படி வரிவிலக்களிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் தற்போது கிடைக்கப் பெறாததால் வரிவிலக்கு கோரி மீள விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இணைக்கப்பட்டுள்ள Supervision and control Act 1960, certificate of Recognition - ன்படி மேற்படி யூசுப்பியா சாரிடபிள் டிரஸ்ட் என்பது சான்றளிக்கப்பட்டுள்ளது.

எனவே, திருநெல்வேலி மாநகராட்சி சட்டப்பிரிவு 123-ல் (c) -ன்படி மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்: அ3/529/2023**

## தீர்மானம் எண்: 255 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

7. தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண்.30 பெருமாள் தெற்கு ரதவீதி புதிய வரிவிதிப்பு எண். 146/030/905350 கதவு எண்.22-ல் அமைந்துள்ள கட்டிடத்திற்கு சொத்துவரி கடந்த 2009-2010 முதல் வணிகப்பயன்பாடு என தவறுதலாக வரி விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது 2022-23 வரை கணினியில் நிலுவையாக உள்ள தொகை ரூ. 6,86,760/ஐ நீக்கம் செய்து வரிவிதிப்புதாரர் ஏற்கனவே செலுத்தி வந்த குடியிருப்புக்கான வரியை 2009-2010 முதல் 2022-2023 வரையிலான காலங்களுக்கு கணினியில் ஏற்றம் செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு**

தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண்.30 பெருமாள் ரதவீதி, புதிய வரிவிதிப்பு எண். 146/030/905350 கதவு எண்.22-ல் அமைந்துள்ள கட்டிடத்திற்கு 1978ம் வருடத்தில் கட்டிட அனுமதி பெறப்பட்டு கடந்த 2015-2016 வரை அரையாண்டிற்கு ரூ.761/- வீதம் சொத்துவரி செலுத்திவந்த நிலையில் கடந்த 2016ம் ஆண்டு மேற்படி சொத்திற்கு, கடந்த 2009ம் ஆண்டு முதல் வணிகப்பயன்பாடு எனக்குறிப்பிட்டு அரையாண்டு வரியாக ரூ.22,662/- என நிர்ணயம் செய்யப்பட்டு 2015-2016-ம் ஆண்டு வரையிலான காலத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு ஆட்சேபனை தெரிவித்து வரிவிதிப்புதாரர் வரிவிதிப்பு மேல்முறையீடு தீர்வாயத்தில் மனுச்செய்து, வணிகப்பயன்பாடு என மாநகராட்சி மூலம் விதிக்கப்பட்ட வரியை ரத்துசெய்து குடியிருப்பு பயன்பாடாக சொத்துவரி நிர்ணயம் செய்ய மே.மு.எண். 20/2018 நாள் 07-12-2020-ல் தீர்ப்புரை பெற்றுள்ளார். அதனடிப்படையில் 2022-2023 வரையிலான காலத்திற்கு வணிகப்பயன்பாடு எனக்குறிப்பிட்டு கணினியில் நிலுவையாக உள்ள சொத்து வரி ரூ, 6,79,860/- மற்றும் திடக்கழிவு மேலாண்மை கட்டணத்தொகை ரூ.6,900/- ஆக மொத்தம் ரூ. 6,86,760/-ஐ நீக்கம் செய்யவும் 2016-2017ம் ஆண்டு முதல் தற்போதுவரை குடியிருப்பு பயன்பாடாக சொத்துவரி கணினியில் ஏற்றம் செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். அ4-2203-2021 (த.ம)**

## தீர்மானம் எண்: 256 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

8. திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வார்டு எண்கள் 1 முதல் 4, 10 முதல் 14 மற்றும் 28 முதல் 30 ஆகிய பகுதிகளுக்கான காலிமனைவரி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள விபரப்படி காலிமனை வரிவிதிப்புகளில் சொத்துவரி வதிக்கப்பட்டு சொத்துவரியானது வசூலிக்கப்பட்டு வரும் நிலையில் தொடர்புடைய காலிமனை வரிவிதிப்புகளை அவ்வப்பொழுது நீக்கம் செய்யாமல் தொடர்ந்து தவறுதலாக

எழுப்பப்பட்டு வரும் கேட்புகள், ரத்து செய்து அவற்றிற்கான கேட்பு தொகை ரூ. **6282205/-** ஐ நீக்கம் (Write off) செய்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு :**

வரிவசூல் பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலும் ஒவ்வொரு வரி மற்றும் வரியில்லா இனத்திலும் காணப்படும் தவறான கேட்புகள் (Erroneous Demand) காரணமாக வரிவசூல் சதவிகிதம் குறைந்து காணப்படுகின்றது. இந்நிலையில் இம்மண்டலத்தின் வருவாய் உதவியாளர்கள், உதவி வருவாய் அலுவலர் ஆகியோரைக் கொண்டு வரியினங்கள் வாரியாக தவறான கேட்பு பதிவினங்கள் மற்றும் வசூலிக்க இயலாத இனங்கள் குறித்து கீழ்க்கண்டவாறு கண்டறியப்பட்டுள்ளது.

| **வரிசை எண்** | **வரி மற்றும் வரியில்லா இனங்களின் விபரம்** | **நீக்கம் செய்யப்பட வேண்டிய தொகை** | **நீக்கம் செய்யப்பட வேண்டிய காரணங்கள்** |
|---|---|---|---|
| 1. | காலிமனைவரி | **6282205/-** | சொத்துவரி விதிக்கப்பட்டு சொத்துவரியானது வசூலிக்கப்பட்டு வரும் நிலையில் தொடர்புடைய காலிமனை வரிவிதிப்புகளை அவ்வப்பொழுது நீக்கம் செய்யாமல், தொடர்ந்து தவறுதலாக எழுப்பப்பட்டு வரும் கேட்புகள் மற்றும் இரட்டைப் பதிவுகள் |

எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு காலிமனை வரிவிதிப்புகளை ரத்து செய்து அவற்றிற்கான கேட்பு தொகையினை கணினியில் இருந்து நீக்கம் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : அ1/ 1010 /2020**

**தீர்மானம் எண்: 257 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

9. திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வார்டு எண்: 53, திருவனந்தபுரம் சாலையில் புதிதாக ISRO வின் கிளையான Satellite Earth station – South நிலையத்திற்கு குடிநீர் இணைப்பு வழங்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு குடிநீர் இணைப்பு வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண் 24385/ஆர்1/2013-4 நாள்: 20.01.2023-இன்படி சொத்துவரிக்கான சேவை வரி 33 1/3% முதல் 75% வரை வசூலிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதில் உள்ளூர் சேவைகளை வழங்குவதில் முழுமையாகவோ அல்லது பகுதியளவோ தன்னிறைவு பெற்றுள்ளதா என்பதை பொறுத்து மத்திய நிறுவனங்களுக்கு சேவை வரி விதிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கப்பல் படை தளம் 160 ச.மீ. ஆகும். எனவே 160 x 10.76 = 1722 ச.அடி உள்ளது. மேற்கண்ட இடம் மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 53, Zone-A-ல் அமைந்துள்ளது. அதன்படி 1722 ச. அடி அளவுக்குட்பட்ட சொத்துவரி ரூ. 6027/- ஆகும். மேற்படி நிறுவனத்திற்கு குடிநீர் இணைப்புக்கான சேவை மட்டுமே வழங்கப்பட வேண்டியுள்ளதால், அரையாண்டு சொத்துவரியில் 6027 * 33 1/3% = ரூ. 2010/- மட்டும் சேவை வரியாக பெற்றுக் கொண்டு, வரிவிதிப்பில் இருந்து விலக்களிப்பது தொடர்பாக மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட வார்டு எண்: 53, திருவனந்தபுரம் சாலையில் புதிதாக ISRO வின் கிளையான Satellite Earth station – South நிலையம் Zone-A-ல் அமைந்துள்ளதால், மேற்படி நிறுவனத்திற்கு குடிநீர் இணைப்புக்கான சேவை மட்டுமே வழங்கப்பட வேண்டியுள்ளதால், அரையாண்டு சொத்துவரியில் 6027 * 33 1/3% = ரூ. 2010/- மட்டும் சேவை வரியாக பெற்றுக் கொண்டு, வரிவிதிப்பில் இருந்து விலக்களிக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண்: 258 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

10. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் ஓய்வு அறை கட்டிடத்தினை இலவசமாக உரிய வசதிகள் செய்து பராமரித்து கொள்ளும் உரிமத்தினை திருநெல்வேலி மாநகராட்சி மாமன்ற அவசரக் கூட்டத் தீர்மானம் எண் 156 நாள்: 24.01.2022-ன்படி அமர் சேவா சங்கம், ஆய்குடி என்பவருக்கு 01.01.2022 முதல் 31.03.2022 வரை மற்றும் 01.04.2022 முதல் 31.03.2023 வரையிலான காலங்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட நிலையில் தற்போது மேற்கண்ட மாற்றுத் திறனாளிகள் ஓய்வு அறை கட்டிடத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளும் உரிம காலத்தினை இம்மாநகராட்சியோடு ஏற்படுத்திய அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2023 முதல் 31.03.2024 முடிய ஓர் ஆண்டிற்கு நீட்டித்து அனுமதி வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும்.

**அலுவலகக் குறிப்பு**

பொருளில் கண்டுள்ளவாறு திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் ஓய்வு அறை கட்டிடத்தினை இலவசமாக உரிய வசதிகள் செய்து பராமரித்து கொள்ளும் உரிமத்தினை திருநெல்வேலி மாநகராட்சி மாமன்ற அவசரக் கூட்டத் தீர்மானம் எண் 156 நாள்: 24.01.2022-ன்படி அமர் சேவா சங்கம், ஆய்குடி என்பவருக்கு 01.01.2022 முதல் 31.03.2022 வரை மற்றும் 01.04.2022 முதல் 31.03.2023 வரையிலான காலங்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட நிலையில், தற்போது மேற்கண்ட மாற்றுத் திறனாளிகள் ஓய்வு அறை கட்டிடத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளும் உரிம காலத்தினை

இம்மாநகராட்சியோடு ஏற்படுத்திய அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2023 முதல் 31.03.2024 முடிய ஓர் ஆண்டிற்கு நீட்டித்து அனுமதி வழங்குவது குறித்து மாமன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். மே.பா அ1/2136/2020**

## தீர்மானம் எண்: 259 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

11. திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் சொத்துவரி நீண்ட காலமாக நிலுவையாக இருந்து வருகிறது. மேற்படி வரிவிதிப்புத்தாரரின் இடங்களை நேரடியாக ஆய்வு செய்ததில் ஒரு சில கட்டிடங்கள் இடிக்ககப்பட்டு புதியதாக கட்டிடம் கட்டப்பட்டு அதற்கு தற்போது புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. பழைய வரிவிதிப்பு ரத்து செய்யப்படாமல் இருந்து வருகிறது. மேற்படி ரத்து செய்யப்படாத பட்டியலின்படியான 179 சொத்துவரி வரிவிதிப்புகள் மற்றும் அவற்றிக்கான நிலுவை கேட்பு மொத்தம் ரூ. 23,13,633/- னை (Erroneous Demand) ரத்து செய்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| **வ.எண்.** | **வரிவிதிப்புகளின் எண்ணிக்கை** | **நீக்கம் செய்ய வேண்டிய கேட்பு தொகை (ரூபாயில்)** | **நீக்கம் செய்ய வேண்டியதற்கான காரணங்கள்** |
|---|---|---|---|
| 1. | 179 | 23,13,633/- | புதிய சொத்துவரி விதிக்கப்பட்ட கட்டிடத்திற்கு பழைய சொத்து வரி ரத்து செய்யப்படாமல் கேட்புகள் நிலுவையில் உள்ளன. |

**அலுவலகக் குறிப்பு :**

புதிய சொத்துவரி விதிக்கப்பட்டு ரத்து செய்யப்படாமல் உள்ள 179 பழைய வரிவிதிப்புகளை அவற்றிற்கான வரி நிலுவைத் தொகையுடன் சேர்த்து (மொத்த தொகை ரூ. 23,13,633/-) ரத்து செய்ய மாமன்றம் ஒப்புதலளிக்கலாம்.

**கோப்பு எண் அ1/252/ 2022**

## தீர்மானம் எண்: 260 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

12. திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட பேட்டை - பழைய பேட்டை இணைப்பு சாலையில் சரக்கு வாகன முனையம் அருகில் சீர்மிகு நகரத்

திட்டத்தின் கீழ் ரூ. 13.81 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மொத்த விற்பனை சந்தையில் **(whole sale market)** கீழ்க்கண்ட விவரப்படி கடைகள் உள்ளன.

**1. கடைகளின் எண்ணிக்கை : 92 எண்ணம் ( ஒவ்வொன்றும் 200 சதுரஅடி)**

**2. குளிர் சேமிப்பு அறை (100மெ.டண். கொள்ளளவு) : 1 எண்ணம் (400ச.அடி)**

மேற்படி கடைகளுக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகைக்கு விடுவது தொடர்பாக அலுவலர் குழு நியமிக்கப்பட்டு **13.03.2023 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு** அலுவலர் குழு கூடி அளிக்கப்பட்ட பரிந்துரையின் படி மேற்படி கடைகளை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகைக்கு விடவும், மேற்படி கடைகளுக்கு சதுர அடி மதிப்பு , குறுமத்தொகை , முன்வைப்புத்தொகை, சால்வன்சி மதிப்பு மற்றும் சால்வன்சி இல்லாத பட்சத்தில் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை போன்றவை கீழ்கண்டவாறு நிர்ணயிக்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1. சதுர அடி ஒன்றிற்கு ரூ. 75/- வீதம் 200 சதுர அடியுள்ள கடை ஒன்றிற்கு மாத வடகை (குறுமத்தொகை) ரூ. 15,000/-
2. குளிர் சேமிப்பு அறை 400 சதுர அடி பரப்பளவு கொண்டதற்கு சதுர அடி ரூ.75/- வீதம் மாத வாடகை (குறுமத்தொகை) ரூ. 30000/-

| | | 200 சதுரஅடி கொண்ட கடை ஒன்றிற்கு | 400 சதுரஅடி கொண்ட கடைக்கு |
|---|---|---|---|
| மேற்படி கடை ஒன்றிற்கான | அ) ஏலமுன்வைப்புத்தொகை | ரூ. 1,80,000/- | ரூ. 3,60,000/- |
| | ஆ) சால்வன்சி மதிப்பு | ரூ.10,00,000/- | ரூ. 15,00,000/- |
| | இ) சால்வன்சிக்கு பதிலான கூடுதல் வைப்புத் தொகை | ரூ. 1,80,000/- | ரூ 3,60,000/- |

**அலுவலகக்குறிப்பு:**

மேலே பொருளில் கண்ட விவரப்படி பேட்டை - பழைய பேட்டை இணைப்பு சாலையில் கட்டப்பட்டுள்ள மொத்த விற்பனை சந்தையில் உள்ள கடைகளை ஏலம் மற்றும் ஓப்பந்தப்பள்ளி நடவடிக்கைகள் மூலம் குத்தகைக்கு விடுவது தொடர்பாக, மேற்படி கடை ஒன்றிற்கு,

| | 200சதுரஅடி கொண்ட கடை ஒன்றிற்கு | 400 சதுரஅடி கொண்ட கடைக்கு |
|---|---|---|
| அ) ஏலமுன்வைப்புத்தொகை | ரூ. 1,80,000/- | ரூ. 3,60,000/- |

| | | |
|---|---|---|
| ஆ) சால்வன்சி மதிப்பு | ரூ.10,00,000/- | ரூ. 15,00,000/- |
| இ) சால்வன்சிக்கு பதிலான கூடுதல் வைப்புத் தொகை | ரூ. 1,80,000/- | ரூ 3,60,000/- |

என நிர்ணயிக்க மாமன்றம் ஒப்புதலிக்கலாம்.

**கோப்பு எண் அ1/125/ 2019**

**தீர்மானம் எண்: 261 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

13. திருநெல்வேலி மாநகராட்சியில் மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் முடிக்கப்பட்ட பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு NHA Associates ஒப்பந்தத்தாரரால் 17.01.2023ல் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது

| S.No | Name of Work | Amount (Rs.) | Register |
|---|---|---|---|
| 1 | BT Surface and construction of Drain at Karunkulam Periyamaruthur pandiyar street W-34 | 1,54,661 | lapsed Register 2017-18 P.no 5 |
| | | **1,54,661** | |

அலுவலக குறிப்பு:

மேற்படி தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii) ன்படி RM தொகை ரூ.1,54,661/- மட்டும் NHA Associates ஒப்பந்தத்தாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

Est No. 26/ 2017-18

**தீர்மானம் எண்: 262 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.**

14. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் திரு.கா.ஜெபராஜன் என்பவரால் ஒப்பந்தம் எடுக்கப்பட்டு கீழ்க்காணும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொகையில் பிடித்தம் செய்த 5% RM தொகையினை அன்னாரது வாரிசும் மனைவியுமாகிய திருமதி D.Mercy Mary திரும்ப வழங்க கேட்டு (M/s Mercy Rajan Associates) 27-01-2023 ல் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது

| S.No | Name of Work | Amount (Rs.) | Register |
|---|---|---|---|
| 1 | Providing BT surface to NGO B colony in W. No 27 kulasekar Alwar street | 49,11,183 | 2019-2020 vol- I P.No.4 |
| | | **49,11,183** | |

அலுவலக குறிப்பு:

பொருளில் காணும் தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. மேற்படி பணிக்கு திரு.கா.ஜெபராஜன் பெயரில் தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. திருகா.ஜெபராஜன் காலம் சென்றுள்ளார். திரு.கா.ஜெபராஜன் என்பவரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை அன்னாரது வாரிசும் மனைவியுமாகிய திருமதி. Mercy Mary க்கு (M/s Mercy Rajan Associates) திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

Est No. 119/2019-20

## தீர்மானம் எண்: 263 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

15. திருநெல்வேலி மாநகராட்சியில் மேலப்பாளையம் மற்றும் பாளையங்கோட்டை மண்டலத்தில் திரு.கா.ஜெபராஜன் என்பவரால் ஒப்பந்தம் எடுக்கப்பட்டு கீழ்க்காணும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொகையில் பிடித்தம் செய்த 5% RM தொகையினை அன்னாரது வாரிசும் மனைவியுமாகிய திருமதி. D.Mercy Mary திரும்ப வழங்க கேட்டு (Mercy Rajan Associates) 27-01-2023 ல் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| S.No | Name of Work | Amount (Rs.) | Register |
|---|---|---|---|
| 1 | Widening of BT surface at shanthi nagar 4th street North portion in W-16 | 49,003 | lapsed Register 2018-19 P.no 46 |
| 2 | BT Surface at Hameenpuram 6th and 7th Street in W-29 | 1,94,044 | lapsed Register 2015-16 P.no 8 |
| 3 | BT Surface at Periya kothapa Pallivasal North side & south side | 1,71,193 | lapsed Register 2015-16 P.no 8 |
| 4 | BT Surface at Palay Bus stand | 35,902 | lapsed Register 2015-16 P.no 22 |
| | | **4,50,142** | |

அலுவலக குறிப்பு:

பொருளில் காணும் தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. மேற்படி பணிக்கு திரு.கா. ஜெபராஜன் பெயரில் தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. திரு. கா.ஜெபராஜன் காலம் சென்றுள்ளார். திரு.கா.ஜெபராஜன் என்பவரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை அன்னாரது வாரிசும் மனைவியுமாகிய திருமதி. Mercy Mary க்கு (M/s Mercy Rajan Associates) திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண்: 264 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

16. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியலில் பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s NHA Associates ஒப்பந்தத்தாரரால் 02-01-2023 சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது

| S.No | Name of Work | Amount (Rs.) | Register |
|---|---|---|---|
| 1 | BT Surface at ward 26 & 27 Turip 4148 | 51,38,926 | 2019-2020 vol- I P.No.9 |
| | | **51,38,926** | |

அலுவலக குறிப்பு:

பொருளில் காணும் தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii) ன்படி RM தொகை ரூ.51,38,926/- மட்டும் m/s NHA Associates ஒப்பந்தத்தாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண்: 265 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

17. திருநெல்வேலி மாநகராட்சியில் மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் முடிக்கப்பட்ட பணிக்கு வழங்கப்பட்ட பட்டியலில் பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s.NHA Associates ஒப்பந்தத்தாரரால் 27.01.2023ல் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது

| வ.எண் | பணிகள் விபரம் | 5% RM தொகை (ரூ.) | மைய அலுவலக வைப்பு தொகை பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | BT Surface at Beedi Workers colony ward 34 | , ‘ 2,03,453 | Lapsed 2017-18 P.no.3 |
| 2 | BT Roads & Construction of Drain from Ambai JN Road to Reddiyarpatti Road to TVM Road W-29 | 16,976 | Lapsed 2017-18 P.no.5 |
| 3 | BT Roads & Construction of Drain From Christ Church St to Pandidurai 2nd street | 37,736 | Lapsed 2017-18 P.no.3 |
| | மொத்தம் | 2,58,165 | |

அலுவலக குறிப்பு:

பொருளில் காணும் தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக

ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii) ன்படி RM தொகை ரூ.2,58,165/- மட்டும் NHA Associates ஒப்பந்தத்தாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண்: 266 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

**18.** திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s NHA Associates ஒப்பந்தத்தாரரால் 27.01.2023 சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| S.No | Name of Work | Amount (Rs.) | Register |
|---|---|---|---|
| 1 | BT Surface at Ram Nagar Middle St South portion | 48,437 | lapsed Register 2018-19 P.no 33 |
| 2 | BT Surface at C.Type HB in Anbu Nagar | 48,261 | lapsed Register 2018-19 P.no 32 |
| 3 | Renewal of BT surface @ Ram Nagar West Portion | 47,942 | lapsed Register 2018-19 P.no 32 |
| 4 | Restoration of BT surface @ EWS HB Anbu Nagar Park | 48,862 | lapsed Register 2018-19 P.no 32 |
| 5 | BT Surface @ Chellathai Nagar ward No 27 | 48,408 | lapsed Register 2018-19 P.no 32 |
| 6 | BT surface @ Sakthi Ngr 2nd & 3rd st ward No 27 | 49,095 | lapsed Register 2018-19 P.no 32 |
| 7 | BT @ Anbu Nagar L Type HB area W-26 | 48,382 | lapsed Register 2018-19 P.no 32 |
| 8 | Restoration of BT surface @ HB Anbu Nagar | 48,909 | lapsed Register 2018-19 P.no 32 |
| 9 | BT Surface @ Ram Nagar | | lapsed Register 2018- |

| | | | |
|---|---|---|---|
| | Middle | 48,527 | 19 P.no 32 |
| 10 | BT @ L Type HB Anbu Nagar East | 49,184 | lapsed Register 2018-19 P.no 30 |
| | | **4,86,007** | |

அலுவலக குறிப்பு:

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii) ன்படி RM தொகை ரூ.4,86,007/- மட்டும் NHA Associates ஒப்பந்தத்தாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

Est No. 496/2017-18

## தீர்மானம் எண்: 267 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

19. திருநெல்வேலி மாநகராட்சியில் மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s NHA Associates ஒப்பந்தத்தாரரால் 27.01.2022 சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| S.No | Name of Work | Amount (Rs.) | Register |
|---|---|---|---|
| 1 | BT @ EB Colony , T Nagar, Nethaji road | 26,37,622 | lapsed Register 2018-19 P.no 30 |
| | | **26,37,622** | |

அலுவலக குறிப்பு:

பொருளில் காணும் தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii) ன்படி

RM தொகை ரூ.26,37,622/- மட்டும் M/s NHA Associates ஒப்பந்தத்தாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ம.எண். 36/2018-19**

## தீர்மானம் எண்: 268 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

20. திருநெல்வேலி மாநகராட்சியில் மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s NHA Associates ஒப்பந்தத்தாரரால் 27.01.2023 ல் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| S.No | Name of Work | Amount (Rs.) | Register |
|---|---|---|---|
| 1 | BT @ Gneniyuappa Nagar 3rd, 6th , 7th , st | 49,438 | lapsed Register 2018-19 P.no 30 |
| 2 | BT @ HB Anna Nagar Adj PC | 48,089 | lapsed Register 2018-19 P.no 30 |
| 3 | BT Surface @ T.Nag 1st North St 2nd North St | 49,450 | lapsed Register 2018-19 P.no 29 |
| 4 | BT Surface @ Peratchi Selvi Nagar W-19 | 48,301 | lapsed Register 2018-19 P.no 29 |
| 5 | Renewal Of BT @ Ram Nagar NH Colony 13th , 14th Cross st | 49,216 | lapsed Register 2018-19 P.no 24 |
| 6 | BT Surface @ Sakthi Nagar 1st cross st w-27 | 48,655 | lapsed Register 2018-19 P.no 24 |
| 7 | Renewal of BT @ NH colony 2nd Main road w-26 | 49,069 | lapsed Register 2018-19 P.no 23 |

| | | | |
|---|---|---|---|
| 8 | BT @ Perumalpuram 2nd cross st west portion w-26 | 48,737 | lapsed Register 2018-19 P.no 23 |
| 9 | BT @ Vinob Nagar W-27 | 42,416 | lapsed Register 2018-19 P.no 23 |
| 10 | BT susrface @ Neelakandan Ngr South Portion W-27 | 48,349 | lapsed Register 2018-19 P.no 23 |
| | | **4,81,720** | |

அலுவலக குறிப்பு:

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii) ன்படி RM தொகை ரூ.4,81,720/- மட்டும் M/s NHA Associates ஒப்பந்தத்தாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ம.எண். 391/(2017-2018)**

## தீர்மானம் எண்: 269 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

**21.** திருநெல்வேலி மாநகராட்சியில் மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s NHA Associates ஒப்பந்தத்தாரரால் 27.01.2023ல் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| S.No | Name of Work | Amount (Rs.) | Register |
|---|---|---|---|
| 1 | BT @ Ram Nagar NH colony 11th 12 th St W-26 | 48,859 | lapsed Register 2018-19 P.no 23 |
| 2 | BT @ NTT Colony 3rd Main Road W-26 | 48,669 | lapsed Register 2018-19 P.no 23 |

| | | | |
|---|---|---|---|
| 3 | BT @ Ram Nagar North St W-26 | 47,946 | lapsed Register 2018-19 P.no 23 |
| 4 | BT Surface @ Perumalpuram 2nd cross st portion w-26 | 48,329 | lapsed Register 2018-19 P.no 23 |
| 5 | BT @ Aavin Diary Milk Roads & cross st W-27 | 49,055 | lapsed Register 2018-19 P.no 23 |
| 6 | BT @ Meenakshi Ngr Main Road W-19 | 48,257 | lapsed Register 2018-19 P.no 22 |
| 7 | BT @ Malliga Colony Main Road W-19 | 48,289 | lapsed Register 2018-19 P.no 22 |
| 8 | BT @ Malliga colony Main Road W-19 | 48,257 | lapsed Register 2018-19 P.no 22 |
| 9 | BT @ Thirumagal Road W-19 | 48,257 | lapsed Register 2018-19 P.no 22 |
| 10 | BT @ T Nagar 6th Middle cross St W-19 | 49,202 | lapsed Register 2018-19 P.no 21 |
| | | **4,85,120** | |

**அலுவலக குறிப்பு:**

மேற்படி தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii) ன்படி RM தொகை ரூ.4,85,120/- மட்டும் M/s NHA Associates ஒப்பந்தத்தாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ம.எண். 21/2018-19**

**தீர்மானம் எண்: 270 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.**

22 . திருநெல்வேலி மாநகராட்சியில் மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொகை பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு NHA Associates ஒப்பந்தத்தாரரால் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| S.No | Name of Work | Amount (Rs.) | Register |
|---|---|---|---|
| 1 | Restoration of BT Surface at Canara Bank Colony Ext in W-26 | 48,868 | lapsed Register 2016-17 P.no 21 |
| 2 | BT surface with pipe Culvert at NagDr Aravinder St | 49,245 | lapsed Register 2016-17 P.no 21 |
| 3 | BT Surface at Thiagaraja Nagar 3rd North street in w-19 | 48,823 | lapsed Register 2016-17 P.no 21 |
| 4 | Restoration of BT surface at Rahumanpuram South North st | 49,165 | lapsed Register 2016-17 P.no 13 |
| 5 | Restoration of BT surface at T.Nagar in Ambai Road in ward No 28 | 48,765 | lapsed Register 2016-17 P.no 13 |
| 6 | CC Pavement at Andavar st W-32 | 18,147 | lapsed Register 2016-17 P.no 4 |
| 7 | BT Surface at Ram Nagar Extn 2nd st w-26 | 49,092 | lapsed Register 2016-17 P.no 13 |
| 8 | BT surface at Ram Nagar Extn 3rd st w-26 | 48,607 | lapsed Register 2016-17 P.no 13 |
| | | **3,60,712** | |

அலுவலக குறிப்பு:

மேற்படி தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii) ன்படி RM தொகை ரூ.3,60,712/- மட்டும் M/s NHA Associates ஒப்பந்தத்தாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ம.எண். 450/2016-17**

## தீர்மானம் எண்: 271 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

23. திருநெல்வேலி மாநகராட்சியில் மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியலில் மேற்கொள்ள பிடித்தம் செய்த 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு M/s.NHA Associates ஒப்பந்தத்தாரரால் 27.01.2023 சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது

| வ.எண் | பணிகள் விபரம் | 5% RM தொகை (ரூ.) | மைய அலுவலக வைப்பு தொகை பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | BT Surface & construction of Drain @ W.No .4 | 40,000 | Lapsed 2015-16 P.no.31 |
| | மொத்தம் | 40,000 | |

**அலுவலக குறிப்பு:**

பொருளில் காணும் தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. மேற்படி தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii) ன்படி RM தொகை ரூ.40,000/- மட்டும் NHA Associates ஒப்பந்தத்தாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண்: 272 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

24. திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்தில் கீழ்காணும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தத்தாரரால் முன்வைப்புத் தொகை மற்றும் பின்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்தத்தாரர் திரு.S.சுடலைமுத்து அவர்களால் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| Sl. No | Name of the work | EMD | FSD | Register Details |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 50 பழைய பேட்டை கன்னிவிநாயகர் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | | 9990 | 2019-20 Vol I P.No.7 |
| 2 | திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 51 கிருஷ்ணபேரியில் உள்ள கழிப்பிடம் பராமரித்தல் | 4950 | 4950 | 2019-20 Vol-II P.No 1 & 4 |
| | மொத்தம் | 4950 | 14940 | 19890 |

அலுவலக குறிப்பு

பொருளில் காணும் முன் மற்றும் பின் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10) (i)(ii)ன்படி தொகை ரூ.19,890/- மட்டும் ஒப்பந்தத்தாரர் திரு.சுடலைமுத்து அவர்களுக்கு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 273 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.**

---

25. திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்தில் கீழ்காணும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்தத்தாரரால் முன்வைப்புத் தொகை மற்றும் பின்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்தத்தாரர் திரு.S.சுடலைமுத்து அவர்களால் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| Sl. No | Name of the work | EMD | FSD | Register Details |
|---|---|---|---|---|
| 1 | வார்டு - 44 சாமியாதைக்கா தெருவில் உள்ள பள்ளத்தில் கிணற்றுசரல் நிரப்புதல் | 550 | 550 | 2018-19 Vol I P.No.4 and 16 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வார்டு -46 நெல்லையாபுரம் கீழத்தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலையை செப்பனிடவும் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | | 3750 | 2018-19 Vol-II P.No 4 |
| 3 | வார்டு எண் 47 அசோகா தெருவிலுள்ள கழிப்பிடம் பராமரிக்கவும் , மண்சாலையினை பேவர் பிளாக் அமைக்கவும் | 7600 | 7600 | 2018-19 Vol-II P.No 15 and Vol I P.No 10 |
| 4 | வார்டு எண் 48 ரகுமான்பேட்டை பிரதான தெருவில் பேவர் பிளாக்தளம் அமைத்தல் | 9600 | 9600 | 2018-19 Vol-I P.No 5 and 2 |
| | மொத்தம் | 17750 | 21500 | 39,250 |

அலுவலக குறிப்பு

பொருளில் காணும் முன் மற்றும் பின் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/- க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10) (i)(ii)ன்படி தொகை ரூ.39,250/- மட்டும் ஒப்பந்தத்தாரர் திரு.சுடலைமுத்து அவர்களுக்கு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண்: 274 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

26. திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டு ஏற்கனவே இருந்த காலிமனை வரி ரத்து செய்யப்படாமல் நீண்ட காலமாக நிலுவையாக உள்ளது. மேற்படி ரத்து செய்யப்படாத, பட்டியலின்படியான 714 காலிமனை வரிவிதிப்புகள் மற்றும் அவற்றிற்கான நிலுவை கேட்பு மொத்தம் ரூ. 33,43,829/-னை (Erroneous Demand) ரத்து செய்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| **வ.எண்.** | **வரிவிதிப்புகளின் எண்ணிக்கை** | **நீக்கம் செய்ய வேண்டிய கேட்பு தொகை (ரூபாயில்)** | **நீக்கம் செய்ய வேண்டியதற்கான காரணங்கள்** |
|---|---|---|---|
| 1. | 714 | 33,43,829/- | புதிய சொத்துவரி விதிக்கப்பட்ட கட்டிடத்திற்கு காலிமனை வரி ரத்து செய்யப்படாமல் கேட்புகள் நிலுவையில் உள்ளன. |

**அலுவலகக் குறிப்பு :**

சொத்துவரி விதிக்கப்பட்டு ரத்து செய்யப்படாமல் உள்ள 714 காலிமனை வரிவிதிப்புகளை அவற்றிற்கான வரி நிலுவைத் தொகையுடன் சேர்த்து (மொத்த தொகை ரூ. 33,43,829/-) ரத்து செய்ய மாமன்றம் ஒப்புதலளிக்கலாம்.

**கோப்பு எண் அ1/252/ 2022**

## தீர்மானம் எண்: 275 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

27. திருநெல்வேலி மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 108.65 சதுர கிலோ மீட்டர் ஆகும். மாநகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 522322 ஆக உள்ளது. இம்மாநகரில் நாள்தோறும் உருவாகும் குப்பையின் அளவு 170 மெ.டன் ஆகும். மேற்படி 170 மெ.டன் குப்பையை கையாளுவதற்கு அளவுகோலின்படி (As per Norms) தேவைப்படும் பணியாளர்கள் 1692 பேர் ஆகும். ஆனால் தற்போது 311 நிரந்தர தூய்மை பணியாளர்கள் மற்றும் சுய உதவி குழுக்கள் மூலமாக 753 பணியாளர்கள் தூய்மை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவை தவிர வெளிக்கொணர்வு மூலமாக ஒப்பந்த அடிப்படையில் 233 பேர் பணிபுரிந்து வருகின்றனர். ஆக 1692 பேர் பணிபுரிய வேண்டிய இடத்தில் 1297பேர் மட்டுமே தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் நாள் தோறும் உருவாகும் குப்பையை கையாளுவதில் சிரமம் ஏற்படுவதோடு நகரில் உருவாகும் குப்பையை 100 சதவிகிதம் அப்புறப்படுத்த இயலாத நிலை உள்ளது. மாமன்றத் தீர்மானம் எண்:152, நாள்: 28.10.2022-ன் படி இந்த பணியாட்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, வெளிக்கொணர்வு மூலமாக முற்றிலும் தற்காலிகமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி 2021-2022-ம் வருடத்திற்குரிய துப்புரவு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் அதற்குண்டான ESI, EPF மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட இனங்களையும் உள்ளடக்கி அதன் அடிப்படையில் கூடுதலாக 300 துப்புரவு பணியாளர்களை 01.11.2022 முதல் 25.12.2022 வரையிலான 55 நாட்களுக்கு அமர்த்திக் கொள்வதற்கு மெசர்ஸ். ஜெயராம் வென்ஞ்சர்ஸ், சென்னை நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தக்காலம் 26.12.2022 உடன் முடிவடைந்த நிலையில் பணியின் அத்தியாவசிய அவசியம் கருதி முந்தைய விலை விகதத்திலேயே பணிகள் மேற்கொள்ள அந்நிறுவனத்திற்கு 26.12.2022 முதல் 19.02.2023 வரை காலநீட்டிப்பு வழங்க மாமன்றத்தின் அனுமதி பெறும் வகையில் மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதே போன்று 19.02.2023உடன் பணிக்காலம் முடிவடையும் நிலையில் மேற்கண்ட பணியின் அத்தியாவசிய அவசியம் கருதி மேலும் கூடுதலாக 55 நாட்களுக்கு காலநீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி பெறும் வகையில் மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்கண்டவாறு மாநகரின் தூய்மைப்பணியின் அத்தியாவசிய அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று காலநீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெற மாமன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு, மாநகரில் உருவாகும் 170 மெ.டன் குப்பையை கையாளுவதற்கு அளவுகோலின்படி (As per Norms) தேவைப்படும் பணியாளர்கள் 1692 பேர் ஆகும். ஆனால் 1297 பணியாளர்கள் மட்டுமே தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் நாள் தோறும் உருவாகும் குப்பையை கையாளுவதில் சிரமம் ஏற்படுவதோடு நகரில் உருவாகும் குப்பையை 100

சதவிகிதம் அப்புறப்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால், மாமன்றத் தீர்மானம் எண்:152, நாள்: 28.10.2022-ன் படி இந்த பணியாட்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, வெளிக்கொணர்வு மூலமாக முற்றிலும் தற்காலிகமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி 2021-2022-ம் வருடத்திற்குரிய துப்புரவு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் அதற்குண்டான ESI, EPF மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட இனங்களையும் உள்ளடக்கி அதன் அடிப்படையில் கூடுதலாக 300 துப்புரவு பணியாளர்களை 01.11.2022 முதல் 25.12.2022 வரையிலான 55 நாட்களுக்கு அமர்த்திக் கொள்வதற்கு மெசர்ஸ். ஜெயராம் வென்ஞ்சர்ஸ், சென்னை நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தக்காலம் 26.12.2022 உடன் முடிவடைந்த நிலையில் பணியின் அத்தியாவசிய அவசியம் கருதி முந்தைய விலை விகதத்திலேயே பணிகள் மேற்கொள்ள அந்நிறுவனத்திற்கு 26.12.2022 முதல் 19.02.2023 வரை காலநீட்டிப்பு வழங்க மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதே போன்று 19.02.2023உடன் பணிக்காலம் முடிவடையும் நிலையில் மேற்கண்ட பணியின் அத்தியாவசிய அவசியம் கருதி மேலும் கூடுதலாக 55 நாட்களுக்கு காலநீட்டிப்பு செய்ய மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்கண்டவாறு மாநகரின் தூய்மைப்பணியின் அத்தியாவசிய அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று காலநீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெற மாமன்றம் அனுமதிக்கலாம்.
(எச்2/7799/2022)

## தீர்மானம் எண்: 276 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

28. திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண் 33-ல் உள்ள திருச்செந்தூர் ரோடு லங்கர் கானா வடக்கு பகுதியில் (காம்பவுண்ட் சுவர்ஒட்டியுள்ள இடத்தில் ) உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்திலுள்ள பெட்டிக்கடை பதிலாக இதனை அமைக்க 10X10 என்ற அளவில் ஆவின் பாலகம் அமைத்து ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்ய, திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (வரையறு) திருநெல்வேலி-7 கடிதம் ந.க.எண். 1606 /MS/2022 நாள் 1.12.2022-ஆம் தேதிய கடிதத்தில் இடம் ஒதுக்கீடு செய்து தர கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் பொது மக்கள் நலன் கருதி ஆவின் பாலகம் அமைக்க அனுமதி வழங்கவும், அதற்கு மாத வாடகையாக ரூ.3000/- என நிர்ணயம் செய்திடவும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்:-</u>**

1. பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட, வார்டு எண் 33-ல் உள்ள லங்கர் கானா வடக்கு பகுதியில் (காம்பவுண்ட் சுவர் ஒட்டியுள்ள இடத்தில்) உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்திலுள்ள பெட்டிக்கடை பதிலாக இதனை அமைக்க பால் பூத் 10"X10" அளவில் அமைத்துக் கொள்ளவும்,ஆவின் பாலகத்திற்கு மாத வாடகையாக குறைந்தபட்ச நிர்ணயத் தொகையாக ரூ.3000/- நிர்ணயம் செய்யலாம்.

2. மனுதாரருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் காலியிடம் 10"X10" என்ற அளவில் அமைக்கப்படும்ஆவின் பாலகம் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு செய்யும் வகையில் இருத்தல் கூடாது.
3. மனுதாரர் மேற்படி ஆவின் பாலகத்தில் ஆவின் பாலக பொருட்களை மட்டுமே விற்பளை செய்ய வேண்டும். போதை பொருட்களான சிகரெட், பீடி, புகையிலை, பாக்கு ஆகிய இனங்கள் மற்றும் வடை, சாப்பாடு சம்பந்தப்பட்ட பொருட்கள் ஏதும் விற்கப்பட கூடாது.மேலும் அரசால் தடைசெய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யக்கூடாது.
4. மாநகராட்சி குத்தகை நிபந்தனைகளின்படி (வ.எண்13) குத்தகை காலத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் முழுவதையும் அல்லது எந்த பாகமாவது மாநகராட்சிக்கு தேவையானால் குத்தகைதாரர் எந்தவித தடையும் இன்றி எவ்வித இழப்பு தொகையும் கோராமல் மாநகராட்சியிடம் ஒப்படைத்துவிட வேண்டும் எனவும் இதில் மாநகராட்சியின் தீர்ப்பே முடிவானது.
5. மேற்படி விபரங்களை ரூ.20 /-பத்திரத்தில் ஒப்பந்தம் எழுதி ஒப்புதல் செய்து மாநகராட்சி நிர்வாத்திடம் ஒப்படைக்க வேண்டும்.
6. கடை வாடகையினை பிரதி மாதம் 5-ம்தேதிக்குள் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திவிட வேண்டும். அவ்வாறு செலுத்தப்படவில்லையெனில் 18 விழுக்காடு வட்டியுடன் செலுத்தப்பட வேண்டும்.

**அலுவலக குறிப்பு:**

பொருளில் கண்டுள்ளவாறு திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 33-ல் உள்ள திருச்செந்தூர் ரோடு லங்கர் கானா வடக்கு பகுதியில் (காம்பவுண்ட் சுவர்ஒட்டியுள்ள இடத்தில் ) உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்திலுள்ள பெட்டிக்கடை பதிலாக இதனை அமைக்க 10X10 என்ற அளவில் மாநகராட்சி குத்தகை நிபந்தனைக்குட்பட்டு ஆவின் பாலகத்திற்கு காலி இடம் ஒதுக்கீடு செய்வது குறித்தும் அதற்கு மாத வாடகையாக மாதம் ஒன்றிற்கு ரூ.3000/- மற்றும் அதற்கான சேவைவரி என நிர்ணயம் செய்திடவும் மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்..

**அ1/4590/2022 பாளை**

**தீர்மானம் எண்: 277 ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.**

---

29. திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண்: 46-க்குட்பட்ட மேலநத்தம் பகுதியில் உள்ள திருநெல்வேலி மாநகராட்சிக்கு சொந்தமான தொடக்கப்பள்ளியில் உள்ள கட்டிடம் தற்போதைய மாணக்கர்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லை. எனவே, மாணக்கர்களின் நலன் கருதி அப்பள்ளியில் கூடுதலாக தரைதளம் மற்றும் முதல் தளம் கொண்ட வகுப்பறைக்கட்டிடம் கட்ட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.61.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண்: 46-க்குட்பட்ட மேலநத்தம் பகுதியில் உள்ள திருநெல்வேலி மாநகராட்சிக்கு சொந்தமான தொடக்கப்பள்ளியில் உள்ள கட்டிடம் தற்போதைய மாணக்கர்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லை. எனவே, மாணக்கர்களின் நலன் கருதி அப்பள்ளியில் கூடுதலாக தரைதளம் மற்றும் முதல் தளம் கொண்ட வகுப்பறைக்கட்டிடம் கட்ட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.61.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 278 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

30. திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண்: 46-க்குட்பட்ட விளாகம் பகுதியில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் உள்ள கட்டிடம் தற்போதைய மாணக்கர்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லை. எனவே, மாணக்கர்களின் நலன் கருதி அப்பள்ளியில் கூடுதலாக தரைதளம் கொண்ட வகுப்பறைக்கட்டிடம் அமைப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.30.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண்: 46-க்குட்பட்ட விளாகம் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான தொடக்கப்பள்ளியில் உள்ள கட்டிடம் தற்போதைய மாணக்கர்களின் எண்ணிக்கைக்கு போதுமானதாக இல்லாததால், மாணக்கர்களின் நலன் கருதி அப்பள்ளியில் கூடுதலாக தரைதளம் கொண்ட வகுப்பறைக்கட்டிடம் கட்ட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.30.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 279 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---